பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2027 கார்த்திகை 20 வியாழக்கிழமை (05-12-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 9

# வடக்குத் தேர்தலைத் திட்டமிட்டபடி நடத்துவதில் அரசுத் தரப்பு உறுதி!

## தமிழ் எம். பிக்களிடம் ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, டிசம்பர் 5

வடக்கில் எதிர்வரும் ஜனவரி மாதத்தில் நடத்துவது எனத் தீர்மானிக்கப் பட்டிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலை தமிழ்க் கட்சிகளின் ஆட்சேபனை காரணமாக அரசு ஒத்திவைக்கக் கூடும் என கொழும்பில் முன்னர் பேச்சடிபட்டபோதிலும்-

அத்தேர்தலைத் திட்டமிட்டபடி எப்படியும் ஜனவரியில் நடத்தி முடிப்பதில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடாப்பிடியாக இருப்பதாக வேறு செய்தி வட்டாரங்கள் நேற்று தகவல் வெளியிட்டிருக்கின்றன.

வடக்கில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவதில் தாம் உறுதியாக இருப்பதாக ஜனாதிபதி குமாரதுங்க தமிழ்க் கட்சிகளின் எம்.பிக்களிடம் நேரடியாகத் தெரிவித்து விட்டதாகவும் அறியவந்தது.

கடந்த திங்கட்கிழமை ஆளும் கட்சி எம். பிக்களுக்கு ஜனாதிபதி குமாரதுங்க அளித்த விருந்தில் கலந்து கொண்ட ஈ. பி. டி. பி. மற்றும் புளொட் அமைப்புகளின் எம். பிக்கள் அங்கு வைத்து உள்ளூராட்சித் தேர்தல்களை ஒத்திவைக்குமாறு நேரடியாக ஜனாதிபதியிடம் கேட்டதாகத் தெரிகின்றது.

தேர்தலை நடத்த இது உகந்த தருணமல்ல; பாதுகாப்பான சூழ்நிலையும் சாதகமான நிலையும் இல்லை என்று அவர்கள் தெரிவித்தனர்.

ஆனால் ஜனாதிபதியோ அவர்களிடம் ''தேர்தலை ரத்துச் செய்வதோ அல்லது ஒத்திவைப்பதோ கடினம். யாழ்ப்பாணத்துக்குச் சென்று தமது அரசியல் நடவடிக்கை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



அப்ப .... கவண்மேந்துக் கணக்கிலை ஒஸி தபால் சேவை நடத்திறவையள் உந்த அறிவிப்பாலை 'கிளீன் போல்ட்' எண்டு சொல்லுங்கோ......!

## இலவச அஞ்சல் சேவை இனிமேல் கிடையாது!

யாழ்ப்பாணம், டிச. 5

பாடசாலைகள் உட்பட அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை முதல்வர்கள், மாநகர சபை, நகரசபை, பிரதேச சபை தலைவர்கள் ஆகியோருக்கு அளிக்கப்பட்டிருந்த இலவச அஞ்சல் சேவை எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் நிறுத்தப்படவுள்ளது. இனி முத்திரைக் கட்டணம் செலுத்தியே அவர்கள் தபால்களை அனுப்ப முடியும்.

இத்தகவலை வடமாகாண பதில் பிரதித் தபால் மா அதிபர் திரு. சு. மாணிக்கவா

(7 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி செயலகத்தில் 'என்னடி ராக்கம்மா...!'

கொழும்பு, டிச. 5

ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியால் கடந்த திங்கட்கிழமை ஏற்பாடு செய்யப்பட்ட விருந்துபசாரத்தில் ''அடி என்னடி ராக்கம்மா...'' என்ற தமிழ்ப் பாட்டு தமிழ் எம். பிக்களால் பாடப்பட்டு பெரும் கரகோஷ வரவேற்பைப் பெற்றது.

கடந்த திங்கட்கிழமை பாரிஸில் இருந்து திரும்பியவுடன் அமைச்சர்களுக்கும், அரச மற்றும் அரச சார்பு எம்.பிக்களுக்கும் ஜனாதிபதி விருந்துபசாரத்தை ஏற்பாடு செய்தார்.

இரவு 7-30 மணிக்கு ஆரம்பமான இந்த விருந்து உபசாரத்துக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க

(2 ஆம் பக்கம் பார்க்க)

## ஷெல்லுக்கு இருவர் பலி! 12 பேர் காயம்!!

மட்டக்களப்பு கிரானில் அண்மையில் பொதுமக்கள் தாக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து அங்கிருந்து வெளியேறி வேறு இடங்களில் தஞ்சம் புகுந்திருந்த மக்கள் மீது ஷெல்த் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருப்பதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

கோவில் ஒன்றில் தஞ்சமடைந்திருந்த இரு பெண்கள் இத் தாக்குதலில் பலியாகினர். மேலும் 12 பேர் படுகாயமடைந்தனர். கோவிலும் கடுமையாக சேதமடைந்தது.

(உ-5)

## வடக்கில் கைதான 40 பேர் விடுதலை?

கொழும்பு, டிச. 5

★ யாழ்ப்பாணத்தை இராணுவம் கைப்பற்றிய பின்னர் கைது செய்யப்பட்டு, களுத்துறைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நாற்பது தமிழர்களை உடனடியாக விடுவிப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

★ களுத்துறை விளக்கமறியல் சிறையில் வைக்கப்பட்டிருக்கும் ஏனைய 157 தமிழ் கைதிகளில் 16 பேரைத் தவிர்ந்த ஏனையோர் தொடர்பான பூர்வாங்க விசாரணைகள் பூர்த்தியடையும் பட்சத்தில் உள்ளன.

களுத்துறை தமிழ்க் கைதி

( 8 ஆம் பக்கம் பார்க்க

## விதை உருளைக்கிழங்கு கறிக் கிழங்காகிறது!

### அதனால்விற்பனைக்கு தடைவிதிப்பு!!

வலி. தெற்கு டிச. 5

கமநல சேவை நிலையங்கள் ஊடாக விநியோகிக்கப்பட்ட விதை உருளைக் கிழங்கு நேற்று மருதனார் மடம் சந்தையில் விற்பனை செய்யப்பட்டது.

விதை உருளைக்கிழங்கு கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்டு, கமநல சேவை நிலையங்கள் ஊடாக நேற்று முன்தினம் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டது.

ஆனால் அதில் ஒரு பகுதி கிலோ 175 ரூபாவாக நேற்று மருதனார்மடம் சந்தையில் விற்கப்பட்டது. உணவுக்குரிய உருளைக்கிழங்கு என்று நினைத்து மக்களும் விழுந்

(7 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை சரக்கு ரயில் மீது கண்ணிவெடித் தாக்குதல்!

### 13 பேர் படுகாயம்; பாலம் போட்டாறில் சம்பவம்

மாஹோவிலிருந்து திருகோணமலைக்குச் சென்று கொண்டிருந்த சரக்கு ரயில் ஒன்று நேற்றுக் காலை பத்து மணியளவில் திருகோணமலைக்கு அருகே பாலம் போட்டாறுக்கும் மங்கிபிரிட்ஜுக்கும் (குரங்குப்பாலத்துக்கும்) இடையில் கண்ணிவெடித் தாக்குதலுக்கு இலக்கானது; இதனால் ரயில் என்ஜினும் ரயில் பெட்டிகளும் சேதமடைந்தன. என்ஜின் சாரதி, ரயில்வே காட் உட்பட 13 பேர் காயமடைந்தனர்.

இந்த ரயிலில் என்ஜினை அடுத்து பயணிகள் பெட்டியும் மற்றும் எட்டு சரக்குப் பெட்டிகளும் இணைக்கப்பட்டிருந்தன.

மூன்று கண்ணிகள் வெடித்ததில் என்ஜினும், பயணிகள் பெட்டியும் தண்டவாளத்தை விட்டு விலகி, சரிந்து வீழ்ந்தன; தண்டவாளம் பெரும் சேதமடைந்தது.

திருகோணமலைக்கும் மாஹோவுக்கும் இடையில் இந்த ரயில் என்ஜின் ஒன்றே சேவையில் ஈடுபட்டு வந்ததாகவும்—

அதுவும் இத்தாக்குதலில் சேதமடைந்து விட்டதால், திருமலை — மாஹோவுக்கு இடையில் சேவையாற்றுவதற்கு புதிய என்ஜின் ஒதுக்கப்படும் வரை திருமலைக்கான ரயில் சேவை இடம் பெற வாய்ப்பில்லை எனவும்- திருகோணமலை நகரத் தகவல்கள் தெரிவித்தன.

நேற்று இச்சேவை பாதிக்கப்பட்டதால் யாழ்ப்பாணத்திலிருந்து நேற்று கப்பல் மூலம் திருகோணமலைக்கு வந்து சேர்ந்த பயணிகள், கொழும்பு செல்லமுடியாமல் தவிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் பயணம் செய்ய தனியார் பஸ்களை ஒதுக்கிக் கொடுக்கும் முயற்சிகள் இடம் பெற்றன.

மாவீரர் வார காலத்தில் ரயில் சேவையை சீர்குலைப்பதற்காக விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தலாம் என அஞ்சப்பட்டதால் பாலம் போட்டாறு பகுதியில் — ரயில் பாதையில் — பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. பின்னர் தற்போது அவை தளர்ந்திருந்த வேளையில் இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது.

(உ-3-4-5-150)

## வடக்கு - கிழக்கு ஆசிரியர்கள் போர்க்கொடி!

திருகோணமலை, டிச. 5

★ வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பணியாற்றும் 31 ஆயிரம் ஆசிரியர்களுக்கும் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன் ஆபத்துக்காலப்படி(அலவன்ஸ்) வழங்க வேண்டும்.

★ அன்றேல் எதிர்வரும் 11 ஆம் திகதி ஆரம்பமாகும் ஜி. சீ. ஈ. (சாதாரண) பரீட்சையின் பணியில் ஈடுபட மாட்டோம்.

– மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி திருமலையில் அமைந்துள்ள வடக்கு -

(2ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

கரவெட்டி கல்விக் கோட்ட ஆசிரிய ஆலோசகரான
**திரு. அ. கிருபானந்த மனுநீதி**
அவர்களின் தாயார்

## திருமதி அப்புத்துரை திலகவதியார்

இறைவனடி சேர்ந்ததையிட்டுப் பிரிவால் துயருறும் அவருக்கும் குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

கரவெட்டிக் கல்விக் கோட்டம்,
நலன்புரிச்சங்கம்

(9035)

# 57-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியையும்



தோற்றம்: 08 — 01 — 1933

மறைவு: 10 — 10 — 1996

திருமதி
## மங்கையர்க்கரசி சபாபதிப்பிள்ளை
(மங்கை அக்கா)

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே! அறிவின் சுடரொளியாய் ஒளிவீசி, பண்பின் சிகரமாய்த் திகழ்ந்து, பாசத்தின் உறைவிடமாய் வாழ்ந்து, இறைவனடி சேர்ந்து மாதங்கள் இரண்டாயினும் எங்கள் இதயங்களில் என்றென்றும் நிலைத்திருக்கும் அன்புத்தெய்வமே! உங்கள் ஆத்மாசாந்தி பெறநெஞ்சாரப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மா. சபாபதிப்பிள்ளை (கணவர்),
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

ஆலோலை ஒழுங்கை,
வட்டுக்கோட்டை.

(9034)

# ஓராண்டு நினைவலைகள்



## இராஜசிங்கம் சின்னத்தம்பி

(சமாதான நீதிவான்)
(முன்னாள் உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்க நெறியாளர்)

தோற்றம்: 20 07 – 1918

மறைவு: 18 - 11 - 1996

திதி: 05 - 12 - 96

அன்புத் தெய்வமே!
சமூக சேவையே இலட்சியமாகக் கொண்டு
''சேவை திலகம்'' என மக்களால்
கௌரவிக்கப்பட்டு – தன்னை
சமூக சேவைக்கே அர்ப்பணித்து வாழ்ந்த
எம் குடும்ப விளக்கே!
உங்களது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

- குடும்பத்தினர்

''இன்பவாசம்''
சமரபாகு,
வல்வெட்டித்துறை.

(9030)

## ஜனாதிபதி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

2 மணித்தியாலம் தாமதித்தே வந்தார்.

பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவும் விருந்தில் பங்குபற்றினார்.

இந்த விருந்தில் தகவல் தொடர்பு அமைச்சர் தர்மசிறி சேனநாயக்காவும், கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரானாவும் முக்கிய பாடகர்களாகவிருந்தனர்.

விருந்தில் கலந்து கொண்ட சுகாதார அமைச்சர் பௌசி, ''நேர்ஸ் நோனா'' என்ற பாட்டைப் பாடுமாறு கேட்டார். ரிச்சர்ட் பத்திரானா இந்தப் பாட்டைப் பாட ஆரம்பித்தார். வாத்திய இசை இல்லாததால் பின் வரிசை எம். பிக்கள் கதிரைகளில் தட்டி பாட்டுக்கு மெருகூட்டினர்.

பின்னர் விருந்தில் கலந்து கொண்ட ஈ. பி. டி. பி., புளொட் எம். பிக்களிடம் விறுவிறுப்பான தமிழ்ப் பாட்டு ஒன்றைப் பாடுமாறு விருந்தில் கலந்து கொண்ட ஏனையோர் கோரிக்கை விடுத்தனர்.

'பட்டிக்காடா? பட்டணமா?' படத்தில் வந்த ''அடி என்னடி ராக்கம்மா'' என்ற பாட்டை தமிழ் எம். பிக்கள் பாட, விருந்தில் பலத்த கரகோஷம் எழுந்தது. ஜனாதிபதியும் தலையாட்டி ரசித்தாராம்.

வழமையாக இப்படியான நிகழ்ச்சிகளில் குதூகலமாகப் பாட்டுப்பாடி 'குஷியாக இருக்கும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை இந்த விருந்தில் மட்டும் அமைதியாகப் பின் வரிசையில் அமர்ந்திருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

(உ-3-150)

## ஆசிரியர்கள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சுக் காரியாலயத்துக்கு முன்பாக 350 க்கும் மேற்பட்ட சிங்கள, தமிழ் ஆசிரியர்கள் மறியல் போராட்டம் ஒன்றை நேற்று மேற்கொண்டனர்.

இந்தப் போராட்டம் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று ஆசிரியர் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

நேற்றுக்காலையில் இருந்து நண்பகல் வரை இப்போராட்டம் இடம்பெற்றது.

இதனால் மாகாணக் கல்வியமைச்சுப் பணிகள் நேற்றுப் பாதிப்படைந்தன.

வடக்கு – கிழக்கு மாகாணத்தில் உள்ள 31 ஆயிரம் ஆசிரியர்களுக்கும் ஆபத்துப் படி வழங்க 33 கோடி ரூபா தேவையெனத் தெரிவித்து அரசிடம் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டதாகவும் —

அக்கோரிக்கைக்குப் பதில் கிடைக்காததால் குறிப்பிட்ட தொகையில் அரைவாசியாவது அனுப்புமாறு அரசிடம் கோரப்பட்டதாகவும் —

அரைவாசித் தொகையை அரசு அனுமதித்ததாயினும் அத்தொகை அநுராதபுரம், பொலநறுவைப் பகுதிக்கு வழங்கப்பட்டு விட்டதாகவும் —

மாகாணக் கல்வியமைச்சுச் செயலாளர் திரு. சு. டிவகலாலா உதயனுக்கு நேற்றுத் தெரிவித்தார்.

உடனடியாக, 10 லட்சம் ரூபாவை ஆபத்துப் படிக் கொடுப்பனவுக்கு அனுப்புமாறு அவர் கல்வியமைச்சுக்கு அவசர 'பாக்ஸ்' செய்தி ஒன்றைநேற்று அனுப்பியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆபத்துப் படி முழுதாக வழங்கப்பட்டால் வடக்கு - கிழக்குப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒவ்வொரு ஆசிரிய [illegible] 8 ஆயிரத்தில் இருந்து 10 ஆயிரம் ரூபா வரை கிடைக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(உ-3-150)

# மரண அறிவித்தல்கள்

## Dr. வே. செல்வராசா

நாயன்மார்கட்டைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான ஓவசியர் வேலுப்பிள்ளை–அன்னபூரணம் தம்பதியரின் மகன் Dr. வே. செல்வராசா (ஓய்வு பெற்ற வைத்திய அதிகாரி, கல்கமுவ) 03-12-96 அன்று கல்கமுவவில் காலமானார்.

இவர் பத்மாவதியின் அன்புக் கணவரும், Dr. நிறஞ்சனா, Dr. நிறஞ்ஞன், துஷ்யந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr. ஜெகமோகன், Dr. றோகினி, சுஜித்திரா ஆகியோரின் மாமனாரும், சிறானியின் பேரனும், முத்துராசா, சண்முகராசா (சிமோல்), செல்வநாயகி, பாமசக்தி, சறோஜா, விஜயராணி, ஸ்கந்தராஜா ஆகியோரின் சகோதரருமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 04-12-96 அன்று கல்கமுவவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல்:
இல 76, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு, நல்லூர் (43955)
வே. விஜயராணி (சகோதரி)

திருமதி
## மல்லிகாதேவி குழந்தைவேலு

கிழானை, கொல்லங்கலட்டியைச் சேர்ந்தவரான திருமதி மல்லிகாதேவி குழந்தைவேலு 3 - 12 - 96 அன்று பாண்டியன் குளத்தில் காலமானார்.

அன்னார் குழந்தைவேலுவின் அன்பு மனைவியும், திவாகரன் (ஜேர்மனி), சுதாகரன் (ஜேர்மனி), சிவராணி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும், கருணாகரனின் (நோர்வே) அன்பு மாமியாரும், வாகினியின் பேர்த்தியும், பசுபதி (ஆசிரியர்-பரந்தன்), வைரமுத்து (அப்பாண்ணை), சோமசுந்தரம், நாகராஜா (ஓமான்), பூரணம், பாக்கியம் ஆகியோரின் மைத்துனியும், சிவசுப்பிரமணியம் (ஜேர்மனி), பத்மநாதன் (ஜேர்மன்) ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 4-12-96 அன்று பாண்டியன்குளத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
மல்வம், உடுவில்.
அப்பாண்ணை (மைத்துனர்)
(44395)

## நிரஞ்சலா முத்துலிங்கம்

(வேம்படி மகளிர் கல்லூரி மாணவி, ஆண்டு — 11)

ஆறுகால்மடத்தடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் 216, 2 ஆம் பாடசாலை வீதி, ஸ்கந்தபுரத்தில் வசித்தவருமான நிரஞ்சலா முத்துலிங்கம் 17-11-96 அன்று காலமானார்.

இவர் முத்துலிங்கம் — சுந்தரேஸ்வரி தம்பதிகளின் இளையமகளும் மஞ்சுளாவின் (இந்து மகளிர் கல்லூரி மாணவி) தங்கையும் இராசையா — வாரிப்பிள்ளை தம்பதிகள், கணபதிப்பிள்ளை, முத்துப்பிள்ளை ஆகியோரின் பேர்த்தியும் ஆவார். அவரின் ஈமக்கிரியைகள் 18 – 11 - 96 அன்று ஸ்கந்தபுரத்தில் நடைபெற்றன.

தகவல்:
நாவலடி இந்துமாமன்றம்,
ஆறுகால் மடம்,
ஆனைக்கோட்டை.
(43946)

## தம்பிராசா முருகதாஸ் (வேலணை)

வேலணை 5 ஆம் வட்டாரம் இராசையா வீதியைப் பிறப்பிடமாகவும், கொள்ளுப்பிட்டியை வசிப்பிடமாகவும், கொழும்பு நாலாம் குறுக்குத் தெரு சிவா ரேட் சென்ரர் உரிமையாளருமான தம்பிராசா முருகதாஸ் 2-12-96 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் வேலணை கிழக்கு காலஞ்சென்ற ஆசிரியர் தம்பிராசா — திருமதி த. இராசம்மா ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஐயம்பிள்ளை நடராசா - மனோன்மணி ஆகியோரின் அருமை மருமகனும், பங்கையத்தின் அன்புக் கணவரும், தர்சிகா, நந்துஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், பூமகள், கணேசதாஸ், யோகதாஸன், சிவமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சத்தியநாதன், சுபாசினி, மணிமேகலா, நவரத்தினராசா, கேசவன், மாதவன், நிர்மலாதேவி, வைகுந்தராசா, பேரருட்செல்வி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 7-12-96 சனிக்கிழமை கொழும்பில் நடைபெறும்.

தகவல்:
16/21 சிவன்வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
பூமகள் சத்தியநாதன் (சகோதரி)
(43960)

## கபிரியேல் கொலின்

நல்லூர், இல. 37, செம்மணி வீதியைச் (நாயன்மார்கட்டு) சேர்ந்த கபிரியேல் கொலின் 04-12-96 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி. கபிரியேல் தம்பதியினரின் அன்பு மகனும், கொலின் ஆனந்தசிகாமணியின் அன்புக் கணவரும், அன்பழகன் சிறோமி (சுவிஸ்), பெமினா (யா/செங்குந்தா கல்லூரி நிலோஜி (சுண்டுக்குளி மகளிர் பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (05-12-96) வியாழக்கிழமை பி. ப. 3. 30 மணிக்கு பரி. யாக்கோப்பு சேமக்காலையில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
ஆ. ஆனந்தநாயகம் (செல்வம்)
(சாமுவேல் சன்ஸ் அன் கொம்பனி)
—மைத்துனர்—
37, செம்மணி வீதி,
நல்லூர்.
(43963)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமை செயலணிக் குழுவை யாழ். அனுப்ப முடிவானது ஏன்?

மனித உரிமை செயலணிக் குழு என்பது என்ன? அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட ஓர் அமைப்புத்தான் அது.

அரசசார்பற்ற மனித உரிமைக் குழுக்கள் பல இருக்கின்றன. அந்த அமைப்புக்கள் வடக்கு — கிழக்கில் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் கூட சுதந்திரமாக இயங்க முடியாத நிலையில் உள்ளன.

குறிப்பிட்ட அமைப்புக்களை அங்கு செயற்பட அனுமதித்தால் மனித உரிமை மீறல்கள் வெளியுலகுக்கு தெரிந்து விடும் என்று அரசாங்கம் நினைக்கிறது.

மனித உரிமை செயலணிக் குழுவினர் அரசாங்கத்திற்கு நெருக்கடியைக் கொடுக்கும் வகையில் செயற்படமாட்டார்கள். ஏனெனில் அக்குழுவில் இருப்பவர்கள் பலர் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டவர்கள்.

யாழ். குடாநாட்டில் படையினர் நிலைகொண்டு ஒரு வருடமாகிவிட்டது. அங்கு மட்டுமல்ல கிழக்கிலும் மனித உரிமை மீறல்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன.

அப்படியிருந்தும் மனித உரிமை செயலணிக்குழு இதுவரை மௌனமாகத்தான் இருந்தது.

காரணம் அரசாங்கத்திடம் இருந்து பச்சைக்கொடி காட்டப்படவில்லை. இப்போது யாழ். குடாநாட்டு நிலைவரங்கள் தவிர்க்க முடியாமல் வெளியே தெரியத் தொடங்கிவிட்டன.

இந்நிலையில் மனித உரிமைகள்தொடர்பான கேள்விகளையும் சந்தேகங்களையும் களைந்தேயாக வேண்டும். இல்லாவிடில் அரசாங்கத்தின் 'இமேஜ்' வெளியுலகில் கெட்டுப்போய்விடும்.

### யாழ். நிலைவரம்

''யாழ். குடாநாட்டு நிலைவரம் நன்றாகத் தான் இருக்கிறது. வேண்டுமானால் நீங்களே சென்று பாருங்கள்'' என்று அரச சார்பற்ற மனித உரிமை அமைப்புக்களை அனுப்பி வைக்க அரசாங்கம் தயாராக இல்லை.

அவ்வாறு அனுப்பிவைத்தால் பொல்லைக் கொடுத்து அடிவாங்கிய கதையாகிவிடும்.

எனவேதான் மனித உரிமைச் செயலணிக்குழுவை யாழ்ப்பாணம் அனுப்பி வைத்தது அரசாங்கம்.

யாழ். செல்ல வேண்டும் என்று அரச சார்பற்ற மனித உரிமைக் குழுக்கள் கேட்காமலிருக்கவும், மனித உரிமை நிலைவரங்கள் பற்றி ஆராயப்படுவதாகக் காட்டவும் மனித உரிமை செயலணிக் குழுவின் யாழ். விஜயச் செய்திகளும், அவசர மாநாட்டுச் செய்திகளும் அரசாங்கத்திற்கு சாதகமாக உள்ளன.

மனித உரிமை செயலணிக் குழு ஏற்கனவே அம்பலமான தகவல்களை ஆராயுமே தவிர, வெளியே வராத சங்கதிகளை தோண்டி எடுத்து வெளிச்சத்துக்கு கொண்டு வரும் என்று நம்புவது சிரமம்தான்.

மனித உரிமை செயலணிக் குழு தன்பாட்டில் செயற்படட்டும்; அரச சார்பற்ற மனித உரிமை அமைப்புக்கள், தொண்டர் நிறுவனங்கள் வடக்கு — கிழக்கில் சுதந்திரமாக செயற்படவும் அரசாங்கம் அனுமதிக்க வேண்டும்.

அதுதான் தமிழ்க் கட்சிகளின் கோரிக்கையாக இருக்க வேண்டும்.

சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக் காட்டிய விஷயங்கள் கூட அரசாங்கத்தின் கண்டனத்துக்கு உள்ளாகியிருந்தன.

இந்நிலையில் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட மனித உரிமை செயலணிக்குழு அரசாங்கத்தின் கண்டனத்தை சம்பாதிக்க விரும்புமா என்பது சந்தேகம்தான்.

தொண்டர் நிறுவனங்கள் புலிகளுக்கு சார்பாக மாறிவிடுகின்றன என்று அரசாங்கம் சந்தேகிக்கிறது. அதனால்தான் அவற்றை சுதந்திரமாக செயற்பட அனுமதிக்க தயங்குகிறது.

> கொழும்பிலிருந்து வெளிவரும் **"தினமுரசு"** வார சஞ்சிகையில் **"விளம்பரம் தேடும் அரசியல்வாதிகள்"** என்ற தலைப்பில் **"நாரதர்"** எழுதிய **"எக்ஸ்ரே றிப்போர்ட்"**டின் ஒரு பகுதி இங்கு மறுபிரசுரஞ் செய்யப்படுகிறது.

அதேநேரம் மனித உரிமை செயலணிக் குழுவை மட்டுமே யாழ். குடாநாட்டுக்கு அரசாங்கம் அனுப்பிவைக்கிறது.

அரச சார்பு புலிகள் சார்பு என்ற இரண்டும் இல்லாமல் உண்மைகளை மட்டுமே கண்டறிந்து கூறுகின்ற மனித உரிமைக் குழுக்களால் மட்டுமே, யாழ். குடாநாட்டில் புதையுண்டுள்ள உண்மைகளை வெளியே கொண்டுவர முடியும்.

தமிழ் அரசியல் கட்சிகளுக்கு உண்மைகளை கண்டறியத் தூண்டும் ஆர்வத்தை விட விளம்பரம் தேடும் வேகம் ஏற்பட்டுவிட்டது.

சமீபகாலமாக கூட்டணியினர் சுறுசுறுப்பாக களத்தில் குதித்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

ஜனாதிபதிக்கு ஆதரவான அறிக்கை, கையெழுத்து விவகாரம் போன்றவற்றால் தமது பெயருக்கு ஏற்பட்ட களங்கத்தை துடைத்தெறிய காட்டமான அறிக்கைகளை கையிலெடுத்துள்ளனர்.

எனினும் கூட்டணியினரின் அறிக்கைகள் பேச்சுக்கள் எவற்றிலும் ஜனாதிபதியை நோக்கிய விமர்சனம் தவிர்க்கப்பட்டே வருவதை புத்திசாலியான திருவாளர் பொதுஜனம் அவதானிக்க முடியும்.

எல்லா அறிக்கைகளும் ஜனாதிபதியிடம் நீதி கேட்பதாகவே இருக்கின்றன. நீதிபதியிடம் நம்பிக்கை இருந்தால்தான் அவரிடம் நீதி கேட்க முடியும்.

முப்படைகளின் தளபதி ஜனாதிபதிதான். கூட்டணியும், தமிழ்க்கட்சிகளும் ஜனாதிபதியிடம் நம்பிக்கை இழக்கவில்லை.

அரசியல் சாணக்கியத்தின் அந்த சூட்சுமத்தை மக்கள் புரிந்துகொள்ளாதவரை தமிழ் அரசியல்வாதிகள் பாடு கொண்டாட்டம்தான். ★

# 5வருட கால உள்நாட்டு யுத்தம் சியாராலியோனில் முடிவடைந்தது

## கிளர்ச்சித் தலைவருடன் ஜனாதிபதி சமாதான ஒப்பந்தம்

சியராலியோன் டிச. 5

சியாராலியோனில் 5 வருடங்களுக்கும் மேலாக நடைபெற்ற உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்துள்ளது. அந்த நாட்டின் ஜனாதிபதி அஹ்மத் ரெஜான் கப்பாவும் கிளர்ச்சித் தலைவர் பொடே சங்கோவும் சமாதான ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளனர்.

அயல் நாடான ஐவரிக் கோஷ்டின் தலைநகர் அபிட்ஜானில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போது இதுவரை எதிரிகளாக இருந்த இரு தலைவர்களும் கட்டித் தழுவினர்.

இதுவரை இந்த யுத்தத்தில் பத்தாயிரத்துக்கு மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். சுமார் பத்து இலட்சம் பேர் வீடுகளை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர்.

1991 முதல் அரசுக்கு எதிராகப் போராடி வரும் கிளர்ச்சிக்குழுவான புரட்சிகர ஐக்கிய முன்னணி ஆயுதங்களைக் கைவிட்டு சட்ட பூர்வமான அரசியல் கட்சியாக வேண்டும் என்பதும் —

அக் கட்சியின் அங்கத்தவர்கள் தேசிய இராணுவத்தில் இணைய வேண்டும் என்பதும் — ஒப்பந்தத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

சகல வெளிநாட்டுத் துருப்புக்களும் — குறிப்பாக தென்னாபிரிக்க கூலிப்படைகள் — வெளியேற்றப்படாதவிடத்து பேச்சுவார்த்தை மேசைக்கு வரப்போவதில்லை என்று கிளர்ச்சிவாதிகள் தெரிவித்து வந்தனர்.

எனினும் ஒப்பந்தத்தில் கூலிப் படைகள் வெளியேற்றப்படுவார்களென்று குறிப்பிட்டிருந்தது. எனினும் எப்போது வெளியேறுவார்கள் என்ற காலக்கெடு குறிப்பிடப்படவில்லை.

பத்து வருட கால யுத்தம் முடிவுக்கு வந்துள்ளதை அடுத்து கிளர்ச்சிக் குழுக்களின் பகுதியான பிரீடவுனின் மக்கள் ஆடிப் பாடி மகிழ்ச்சி தெரிவித்தனர். கார்கள், கப்பல்களிலிருந்து ஒலி எழுப்பப்பட்டது. தேவாலயங்களில் மணிகள் அடிக்கப்பட்டன.

(இ-5)

# லாகூரில் குண்டு வெடிப்பு

இஸ்லாமாபாத், டிச. 5

பாகிஸ்தானின் லாகூர் நகரில் சக்தி வாய்ந்த வாகனக் குண்டொன்று வெடித்ததில் இருவர் காயமடைந்தனர்.

குண்டு வெடித்தபோது, அங்கிருந்து ஒரு சில கிலோ மீற்றர்களுக்கு அப்பாலுள்ள அரசு பயணிகள் மாளிகையில் சீன அதிபர் ஷியாங் செமின் தங்கி இருந்தார்.

(இ-5)

# தேவகௌடா பற்றிய நூலை விற்பதற்கு நீதிமன்றம் தடை!

இந்தியப் பிரதமர் தேவகௌடா குறித்த சர்ச்சைக்குரிய ஒரு புத்தகத்தை விற்பது, விநியோகிப்பது மற்றும் வேறுமொழிகளில் மொழி பெயர்ப்பது ஆகியவற்றுக்கு பெங்களூர் நீதிமன்றம் ஒன்று இடைக்காலத் தடை விதித்துள்ளது.

பாரதீய ஜனதாக்கட்சியின் முன்னாள் எம்.டி ஒருவர் எழுதிய இந்தப் புத்தகத்தில் தேவகௌடாவுக்கெதிராக இலஞ்சக் குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

(இ-5)

# சந்திரனில் பனிக்கட்டி

லண்டன், டிச. 5

தண்ணீர்க்கசிவு எதுவுமின்றி வரட்சியாக இருப்பதாக இதுவரை விஞ்ஞானிகளால் அறியப்பட்ட சந்திரனின் தரைப்பகுதி பற்றி தற்போது புதிய தகவல்கள் வந்துள்ளன.

அமெரிக்க இராணுவம் சந்திரனுக்கு அனுப்பிய ஆய்வு விண்கலமொன்று அங்கு பனிக்கட்டிகள் புழுதியுடன் கலந்திருப்பதாக தகவல் அனுப்பியுள்ளது.

இப் புதிய தகவலானது சந்தேகத்துக்கிடமின்றி உறுதி செய்யப்படின் மனிதர்களை சந்திரனுக்கு அனுப்பி குடியிருக்க வைக்கும் திட்டத்தை விரைவில் உருவாக்கலாம் என்ற விஞ்ஞானிகளின் திட்டம் புத்துயிர் பெறும். (இ-5)

# உலக அரங்கில்

## மான்கள் இறக்கும் அபாயம்

மொஸ்கோ, டிச. 5

ரஷ்யாவின் சைபீரிய மாநிலத்தில் மான்கள் மேய்வதற்கான காடுகளில் 70 சதவீதமான காடுகள் பனிக்கட்டியினால் மூடப்பட்டுவிட்டதால் மான்களுக்கு உணவுப் பஞ்சம் ஏற்பட்டுள்ளது.

சுமார் மூவாயிரம் மான்கள் இறந்து விட்டதாகவும்— அப்பகுதியிலுள்ள சுமார் 3 இலட்சம் மான்களில் அரைவாசி மான்கள் விரைவில் இறந்துவிடும் அபாயம் ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-10)


## தேவை

பெண் லிகிதர் தேவை. நகரப்புறத்தில் வசிப்பவர் விரும்பத்தக்கது. நேரில் தொடர்பு கொள்ளவும்.

நோர்த் சிலோன் தொழில்நுட்பக் கல்லூரி
2 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

(43950)

## கீன் கல்வி நிலையம்

திருநெல்வேலி

ஆண்டு 4 முதல் O/L வரை
புதுப் பொலிவுடன்
புதிய வகுப்புகள்
ஆரம்பம்: 05 - 12 - 1996

எமது ஆசிரியர் குழு

| | |
|---|---|
| தமிழ்:- | புலவர் சிவா<br>S. ஜெயக்குமார் |
| கணிதம்:- | S. வாமதேவன்<br>T. கருணாகரன் |
| விஞ்ஞானம்:- | இரா செல்வவடிவேல்<br>சண்முகலிங்கம் |
| சமூகக்கல்வி:- | A. குணசிங்கம் |
| ஆங்கிலம்:- | S. சந்திரமௌலி<br>S. பரமேஸ்வரன் |
| வர்த்தகம்:- | மகேஸ்வரன் |

★ விசேட சிங்கள வகுப்பும் ஆரம்பமாகிறது.

திரு T. சகாதேவன்

அனுமதிகளை முன்கூட்டிப் பெற்றுக் கொள்ளவும்

(43935)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்
திரு. வேல்நம்பி
அவர்களின் அன்புத்தந்தை

## செல்லையா திருநாவுக்கரசு


அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவருக்கும், அன்னாரது குடும்பத்துக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நிர்வாகி,
ஆசிரியர்கள், மாணவர்கள்.

சிவாகி கல்விநிலையம்,
சாவகச்சேரி.

(43938)

# ஆறாத 6 ஆம் மாத நினைவஞ்சலி



## அமரர் நடராசா சேகர்

(சேகர் வீடியோ சென்ரர் - நெல்லியடி)

தாய் மடியில்: 1961—10—02
தெய்வ அடியில்: 1996—06—05

மாதங்கள் ஓராறு மறைந்தாலும் துயரம்
மாறாத நிலையாகி மனம்வாடு கின்றோம்
மோதும்நின் நினைவாலே தினம்வாடு கின்றோம்
மகனேஎம் சேகர்நீ பெறுவாயே சாந்தி.

அப்பா, அம்மா,
சின்னையா, ஆசையம்மா,
சகோதர, சகோதரியர்,
மற்றும் உறவினர்,
நண்பர்கள்.

கலட்டித்துறை,
இமையாணன் வடக்கு,
உடுப்பிட்டி.

(சி/3665)

# கூட்டுறவுப் பரீட்சை

யாழ்ப்பாணம், டிச. 5

கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர சாதாரண பிரிவு 1996 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சை 1997 ஜனவரி 6ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் நடைபெறும்.

புதிய கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர சாதாரண பிரிவுப் பயிற்சி 1997 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பமாகும் என கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி அதிபர் சண்முகசுந்தரம் தெரிவித்தார். (இ-15)

# A/L 98

பொருளியல்
கேள்விக் கோட்பாடு
ஆசிரியர் திரு. விக்கி
ஆரம்பம்: 07 - 12 - 96

**BRIGHT INSTITUTE**

பிளச்சர்ஸ் லேன்,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

(43936)

# C. C. A

வெலிங்டன் சந்தி - யாழ்.

**A/L - 98**
(கலை - வர்த்தகம்)
புதிய பிரிவு
ஆரம்பம்: 07-12-96
(8 மணி)

**A/L - 96**
DAY CLASS
2ஆம் பிரிவு
ஆரம்பம்: 09-12-96
(10-00 மணி)

நிர்வாகி

(43899)

# ஊர்காவற்றுறை மக்கள் வங்கிக்கிளை திறப்பு விழா

மக்கள் வங்கியின் ஊர்காவற்றுறைக் கிளை **1996—12—05** ஆந் திகதி வியாழக்கிழமை இன்று முற்பகல் **10-30** மணிக்கு ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக உள்ள கட்டடத்தில் மீளவும் திறந்து வைக்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். வாடிக்கையாளர்களையும், ஆதரவாளர்களையும் இவ்விழாவில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

உதவிப் பொது முகாமையாளர்,
பிரதேசத் தலைமையகம்,
மக்கள் வங்கி,
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

(சி/3655)

# Maths Centre

ம.ம. வித்தியாலய வீதி, நெல்லியடி.

10 ஆவது வருட சேவையில்

## ஆண்டு 11, 10, 9, 8, 7, 6, 5

ஆகிய புதிய பிரிவுகள்
ஆரம்பம்: 07 - 12 - 1996 சனி
பிற்பகல் 3-00 மணி

குறிப்பு: i எமது ஆசிரியர் குழுவுடன் புதிய அனுபவமுள்ள ஆசிரியர்களும் இணைந்துள்ளனர்.
ii சித்திரமும் இவ்வருடம் ஆரம்பமாக உள்ளது.

விவரங்களுக்கு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

- நிர்வாகி

(43943)

# பிறந்தநாள் வாழ்த்து



## செல்வன் சு. துஷாந்

உடுப்பிட்டி ரஜினி பீடா ஸ்ரோர்ஸை சேர்ந்த
**சுந்தரலிங்கம்-நிர்மலாதேவி தம்பதிகளின்**
செல்வப் புதல்வன் துஷாந் தமது **இரண்டாவது** பிறந்த தினத்தை **05 - 12 - 96** இன்று தமது இல்லத்தில் சிறப்பாக கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, பெரியப்பா, பேபி அத்தை, அம்மன் அத்தை, ராசு அத்தை, கிருசாந் அத்தான், ஜஸ்மினா, ஏழாலை கோபி அண்ணா, மானிப்பாய் மாமா, மாமி, அம்மம்மா, அம்மப்பா, கிமாலி, மாவேந்தன், கீதா, நிதுர்ஷன், சுதுமலை மாமா, மாமி, கலா ரஜினி, பிரபா, ரகு மற்றும் மாலா, கஜன் மற்றும் உடுப்பிட்டி நண்பர்கள், உறவினர்கள் விநாயகர் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

ரஜினி பீடா ஸ்ரோர்ஸ்,
உடுப்பிட்டி.

(43725)

# பருத்தித்துறை பிரதேச சபை

# மீன் கேள்வி அறிவித்தல்

## 1997 ஆம் ஆண்டு

## இறைச்சிக்கடைகள், சந்தைகள் குத்தகை

கேள்விப் படிவம் வழங்கல்:- 11-12-1996 ஆம் திகதி பி.ப. 3-00 மணி வரை. (இல. நேரம்)
கேள்விப் படிவம் ஏற்றல்:- 12-12-1996 ஆம் திகதி பி.ப. 2-00 மணி வரை.
கேள்விப் படிவம் திறத்தல்:- 12-12-1996 ஆம் திகதி பி.ப. 2-30 மணி

| குத்தகை விவரம் | ஏற்றுக்கொள்ளப் படக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்பு பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|---|
| மாட்டிறைச்சிக் கடை | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 1. செம்பியன்பற்று மாட்டிறைச்சிக் கடை | 5,000.00 | 1,000.00 | 150.00 |
| 2. தாளையடி மாட்டிறைச்சிக் கடை | 5,000.00 | 1,000.00 | 150.00 |
| ஆட்டிறைச்சிக் கடை | | | |
| 1. புலோலி ஆட்டிறைச்சிக் கடை | 10,000.00 | 1,500.00 | 150.00 |
| 2. அல்வாய் நாவலடி ஆட்டிறைச்சிக் கடை | 15,000.00 | 1,500.00 | 150.00 |
| 3. கெருடாவில் ஆட்டிறைச்சிக் கடை | 5,000.00 | 1,500.00 | 150.00 |
| சந்தைகள் | | | |
| 1. கெருடாவில் சந்தை | 1,000.00 | — | 150.00 |
| 2. கற்கோவளம் சந்தை | 2,000.00 | — | 150.00 |

ஆ. சிவசுவாமி,
விசேட ஆணையாளர்,
பருத்தித்துறை பிரதேசசபை, புலோலி.

திகதி: 02-12-1996

(சி/3684)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Nallur Branch Library

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வி தேவப்பிரியா பாலசுந்தரம்

அன்னை மடியில்: **20 - 10 - 1990**
ஆண்டவன் அடியில்: **16 - 12 - 1995**
திதி: **05 - 12 - 1996**

எங்கள் ஆருயிர்ச் செல்வமே உனைப் பிரிந்து
— ஓராண்டு சென்றதே
உன் கொஞ்சும் மொழி கேட்டு மகிழ்ந்திருந்தோமே
பாடியும் ஆடியும் நீ காட்டிய விளையாட்டுக்கள்
— எத்தனை?
நீ எம்மிடையே இல்லை என்று நம்ப முடியவில்லையே
ஐந்து வயது நிறைந்த நீயும் ஆசையோடு
பள்ளி செல்லும் அழகைப் பார்க்க இருந்தோமே
கணப்பொழுது கூட நீ அம்மாவை விட்டுப்
— பிரிந்திருப்பதில்லையே
அழுதாலும் ஆறவில்லை தொழுதாலும் தீரவில்லை
எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்தி நீ சென்ற
— இடம்தான் ஏதம்மா?

உன்பிரிவால் வாடும்:
**அப்பா, அம்மா, அம்மம்மா,**
**அக்காமார், அண்ணா.**

பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். (9029)

இலங்கை அகதிகளில்

# 15-35 வயதுக்கு இடைப்பட்டோர் முகாம்களிலேயே தங்க வேண்டும்

## தமிழக அரசு கண்டிப்பான உத்தரவு

கொழும்பு, டிச. 5

சமீபத்திய இராணுவ நடவடிக்கைகளால் இலங்கையில் இருந்து அகதிகளாக தமிழகம் சென்றவர்களில் இளம் வயதினர் முகாம்களுக்கு வெளியே தங்க தமிழக அதிகாரிகள் தடை விதித்துள்ளனர்.

இலங்கையிலிருந்து தமிழகத்துக்கு தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் இலங்கைத் தமிழர்களுடன் விடுதலைப் புலிகள் மற்றும் தமிழ்க் குழுவினர் வந்து விடுவார்கள் என்ற காரணத்தால் இந்த தடை விதிக்கப்பட்டுள்ளது என்று தமிழக அதிகாரிகள் தெரிவித்தனர்.

15 வயதுக்கும் 35 வயதுக்கும் உட்பட்ட இளைஞர்களையும், யுவதிகளையும் எக்காரணம் கொண்டும் முகாமுக்கு வெளியே தங்க அனுமதிக்கக்கூடாது என்று முகாம் அதிகாரிகளுக்கு கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (உ-3-150)

## பரீட்சை முடிவை ஜன. 2 க்கு முன் வெளியிட முடிவு

கொழும்பு, டிச. 5

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 2 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள புதிய தவணைக்கு முன்னர் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு பரீட்சைத் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

ஏற்படக்கூடிய தாமதங்களைத் தவிர்த்து ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதில் முக்கியத்துவம் அளிக்குமாறு கல்வி.உயர் கல்வி அமைச்சர் ரிச்சேர்ட் பத்திரான சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்திருந்தார்.

விடைத்தாள்கள் திருத்தப்பட்டு மாணவர்கள் பெற்றுள்ள புள்ளிகள் தற்போது கணனியில் தொகுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

## 2 ஆம் மாத நினைவலைகள்



அமரர்

### அருந்ததிநாயகம் கனகரத்தினம்

(பெரியம்மா)

அன்னை மடியில்: **14 - 12 - 1929**
ஆண்டவன் அடியில்: **08 - 10 - 1996**

08 - 10 - 96 அன்று சிவபதமடைந்த எமதன்புப் பெரியம்மாவின் 2 ஆம் மாத திதி நிகழ்வும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் அவரது இல்லத்தில் நாளை (6 - 12 - 96) நடைபெறும். இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்.**

ஆராய்ச்சியார் வளவு,
கொக்குவில் கிழக்கு. (9031)

சங்கானை ப. நோ. கூ. சங்கம் (வரையறுக்கப்பட்டுள்ளது) சங்கானை

# முக்கிய அறிவித்தல்

## கிளைக் குழுத் தேர்தல் - 1996

பின்வரும் கிளைகளில் கீழ்க்குறிப்பிட்ட திகதிகளில் நியமனப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

திகதி **20—12—1996** வெள்ளிக்கிழமை

| கிளை இல. இடமும் | ஏற்றுக் கொள்ளும் கிளை இல. இடமும் |
|---|---|
| 03 சித்தன்கேணி | 03 சித்தன்கேணி |
| 04 பனிப்புலம் அம்பாள் | 04 பனிப்புலம் அம்பாள் |
| 05 பண்ணாகம் | 05 பண்ணாகம் |
| 06 சுழிபுரம் வட கிழக்கு | 06 சுழிபுரம் வட கிழக்கு |
| 07 சுழிபுரம் மத்தி<br>08 சுழிபுரம் குகன் | 07 சுழிபுரம் மத்தி |
| 09 சுழிபுரம் மேற்கு | 09 சுழிபுரம் மேற்கு |
| 11 மூளாய்<br>34 தொல்புரம் மேற்கு | 11 மூளாய் |
| 10 பொன்னாலை<br>12 தொல்புரம்<br>12 ஏ நெல்லியான் | 12 தொல்புரம் |
| 14 தொல்புரம் மத்தி | 14 தொல்புரம் மத்தி |
| 15 தொல்புரம் கிழக்கு | 15 தொல்புரம் கிழக்கு |
| 16 வட்டு- பிளவத்தை | 16 வட்டு- பிளவத்தை |
| 17 வட்டு. சிவன்<br>18 வட்டு. கிழக்கு | 17 வட்டு. சிவன் |

திகதி **21—12—1996** சனிக்கிழமை

| கிளை இல. இடமும் | ஏற்றுக்கொள்ளும் கிளை இல. இடமும் |
|---|---|
| 19 வட்டு-மூளாய்<br>20 வட்டு-மேற்கு | 19 வட்டு-மூளாய் |
| 21 வட்டுக்- கோட்டை. | 21 வட்டுக் கோட்டை |
| 22 அராலி- மேற்கு வடக்கு | 22 அராலி மேற்குவடக்கு |
| 23 அராலி வடக்கு<br>27 அராலி செட்டியா மடம் | 27 அராலி - செட்டியா- மடம் |
| 24 அராலி தெற்கு கிழக்கு | 24 அராலி தெற்கு கிழக்கு |
| 25 அராலி விக்கி னேஸ்வரா<br>26 அராலி ஐயனார் | 25 அராலி விக் கினேஸ்வரா |
| 28 துணவி<br>29 சங்கரத்தை துணவி | 29 சங்கரத்தை துணவி |
| 30 சங்கானை கிழக்கு மத்தி<br>33 சங்கானை கிழக்கு | 30 சங்கானை கிழக்கு மத்தி |
| 31 நிற்சாமம் | 31 நிற்சாமம் |
| 32 சிலம்புப் புளியடி | 30 ஏ சங்கானை கிழக்கு மத்தி |

(1) நியமனப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் நேரம் காலை 9-00 மணி முதல் காலை 10-00 மணி வரை.
(2) ஆட்சேபனைகள் ஏற்றுக் கொள்ளப்படும் நேரம் காலை 10-00 மணி முதல் காலை 11- 00 மணி வரை.

கிளைக் குழுத் தேர்தல் இருப்பின் **28-12-96** ஆம் திகதி சனிக்கிழமை மு. ப. 9-00 மணி தொடக்கம் பி. ப. 4-00 மணி வரை நடைபெறும். நியமனப் பத்திரங்களை ஏற்றுக் கொள்ளும் கிளை நிலையங்களில் ரூபா **10/-** செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

**மு. க. மாசிலாமணி,**
**தேர்தல் உத்தியோகத்தர்.**

பிரதேச செயலகம்,
வலி மேற்கு, சங்கானை.
03-12-96. (சி-3661)

## 90 ஆம் நாள் நினைவலைகள்

மலர்வு: **21 — 01 — 1958**



உதிர்வு: **07 — 09 — 1996**

### அமரர் சிதம்பரன் கிருபாமூர்த்தி

(தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்க ஊழியர், கைதடி)

''அன்புத்தம்பி 'சூரி' சென்ற வழிதேடிச்
சென்றனையோ?
''துணைக்குச் சென்று 'துணைவி' தனைப் பிரிந்தீர்
அளப்பரிய செயல் புரிந்தீர் — அவனியிலே நாம்
இழக்க முடியாததொன்றை இழந்து
தவிக்கின்றோம்.''

இன்று (05-12-1996) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும், மதியபோசனத்திலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**அன்பு மனைவி கி. கமலேஸ்வரி,**
**சகோதரர்கள், மைத்துனர்கள்.**

கைதடி மத்தி,
கைதடி. (43926)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புன்னாலைக் கட்டுவன் தெற்குச் சந்திக்கு அருகாமையில் ஊரெழு புன்னாலைக் கட்டுவன் எல்லைக் கரையில் தோட்டக் காணியும் தோட்டமாக்கக் கூடிய காணியுமாக 36 பரப்பு விற்பனைக்குண்டு. தொடர்பு: தம்பிராசா விக்கினேஸ்வரன், புன்னாலைக்கட்டுவன் தெற்கு, புன்னாலைக் கட்டுவன். (43895)

AVERY தராசு 250 கிலோ விற்பனைக்குண்டு. தொடர்பு:- க. நடராசா ''கைலையங்கிரி'' பட்டின சபை ஒழுங்கை, மானிப்பாய். (9023)

எமது சங்கத்தில் விதை வெங்காயம் விற்பனைக்குண்டு தேவையானவர்கள் நேரில் பார்வையிட்டு 10 - 12 - 96 ஆம் திகதிக்கு முன் விலை விவரங்களை சமர்ப்பிக்கவும். பொது முகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி. (சி/3668)

தகர சுருக்குக் கேற்று (12அடிX8அடி), கடை அலுமாரி [முதிரை] சோக்கேஸ், பலகை இறாக்கைகள், பல சரக்கு பெட்டி [பெரியது], இரும்பு திருக்கல்வண்டி, இரும்புச் சில்லுகள், பெரிய நெல்லுப் பத்தாயம் விற்பனைக்கு. த. ஆறுமுகம், ''பவள மாளிகை,'' செங்குந்தர் வீதி, கரவெட்டிகிழக்கு, கரவெட்டி. (43940)

### எரு விற்பனைக்கு

எமது சங்கத்தில் எரு விற்பனைக்குண்டு. தேவைப்படுவோர் 10-12-96-ம் திகதிக்கு முன் எருவைப் பார்வையிட்டு விலை விவரங்களை சமர்ப்பிக்கவும், பொது முகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி. (சி/3669)

### திருமண சேவை

சகல தொழில்சார் மணமக்களதும் பெற்றோர்கள் (இந்துக்கள், கிறிஸ்தவர்கள்) அலைச்சல் – தாமதங்களைத் தவிர்த்து பொருத்தமான மணமக்களுக்கு வரலாம். ''சேவை நம்பகம்'' விவாக சேவை, யாழ். வீதி, சிறாம்பியடி, யாழ்ப்பாணம். (43933)

துர்க்கா திருமண சேவை. திங்களில் இருந்து புதன் வரை. நாவலர் றோட், 178 ஆம் இலக்க இல்லத்திலும், (காலை 8.00 – 4.00 வரை) மறுநாள்களில் புலோலியிலும் தொடர்பு கொள்ளலாம். (43916)

### இலவச வீடு

சுதுமலை அம்மன் கோயிலுக்கு அருகாமையில் ஒரு வசதியான வீடு இலவசமாக இருப்பதற்கு கொடுக்கப்படும். அரசாங்க, தனியார் துறையில் உத்தியோகம் செய்யும் கண்ணியமானோர் விரும்பத்தக்கது. தொடர்பு: கு. சோமசுந்தரம், தினேஸ் பேக்கரி, மானிப்பாய். (43925)

### பழைய புத்தகங்கள்

பழைய புத்தகங்களை, சஞ்சிகைகளை, பத்திரிகைகளை வாங்கவும், விற்கவும் பாடசாலைத் தேவைகளை நிறைவு செய்யவும் ஜோஸ்யர், 308A, காங்கேசன் துறைசாலை, யாழ்ப்பாணம். (9009)

### தவறிவிட்டது

பொன்னம்பலம் ஆனந்தராசா, குருநாத கோயிலடி, தெல்லிப்பழை கிழக்கு ஆகிய எனது 64175223 V இலக்கமுடைய அடையாள அட்டை யாழ். ஆஸ்பத்திரி முன் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து எஸ். ரி. மெடிக்கல், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (43927)

### SPOKEN ENGLISH

சுலபமான முறையில் குறுகிய காலத்தில் ஆங்கிலம் பேசப் பயில. (16 வயதிற்கு உட்பட்ட மாணவருக்கு 50/- மாதம். மேற்பட்ட மாணவருக்கு 100/-) தொடர்பு: ந. விக்கினேஸ்வரன் ஆச்சாரி, ஜெயந்தி ஸ்ரோர்ஸ், 426, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (43934)

## விலை வீழ்ச்சி

வலி. தென், மேற்கு டிச. 5 பிரதான சந்தைகளில் வெங்காயத்தின் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. (இ145)

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**97 O/L**

**DAY CLASS**

புதிய பிரிவு 1

ஆரம்பம்: 6 - 12 - 1996

காலை 8.00 மணி

(43931)

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

**கணக்கியல்**

திரு. பாலவாசன்

98 தொங்கல் 2.00 To 3.00

97 பங்குடைமை 3.00 To 4.40

ஆரம்பம்: 8 - 12 - 1996

(43932)

## ஒய்வு பெற்ற அதிபர்களுக்கான கூட்டம்

(ஓய்வூதியம் பெறாதோர்)

30–10–1995 இல் இடம் பெயர்ந்த பின்னர் ஓய்வு பெற்று, இற்றைவரை ஒய்வூதியம் பெறாத பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் 07-12-96 சனிக்கிழமை மு. ப. 10.00 மணிக்கு (புதியநேரம்) யா/ நல்லூர் இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் (மங்கயர்க்கரசி வித்தியாலயம்) நடைபெறும். சம்பந்தப்பட்ட அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

- இணைப்பாளர்

(43937)

25 வருடங்களுக்கு மேலாக யாழ். மாவட்டத்தில் சிறந்த பெறுபேறுகளை வழங்கி வரும்

## நிரு ரியுசன் சென்றர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

## கல்வியாண்டு 1997

### ஆண்டு 4 முதல் ஆண்டு 11 வரை

| | |
|---|---|
| விஞ்ஞானம் | :- இரா செல்வவடிவேல், சங்கரதாஸ், றஜீவன். |
| கணிதம் | :- இந்திரன், சிவராம், அருட்பிரகாசம், S.S. பிள்ளை. |
| தமிழ் | :- N.S. மணியம், சுந்தரலிங்கம். |
| சமூகக்கல்வி | ;- வேலா, சிவநேசன், மயூரன். |
| ஆங்கிலம் | :- சந்திரமௌலி, இராஜநாயகம், தர்மலிங்கம், றமேஸ். |
| சமயம் | :- பிரதீஸ். |
| வர்த்தகம் | :- நாதன். |

ஆரம்பம்: 08-12-1996 ஞாயிறு காலை 7 மணி

### ஆண்டு 4, 5 புலமைப்பரிசில் வகுப்பு

கணிதம்: S. S. பிள்ளை

தமிழ் : சுந்தரலிங்கம்

(43918)

# நினைவஞ்சலி

## 10ஆம் மாதம்




அமரர் தம்பிப்பிள்ளை சின்னராசா

(உரிமையாளர்: கமலா ஸ்ரோர்ஸ் — சிலாபம், ராஜா கிறீம் கவுஸ் — யாழ்.)

தோற்றம்: 13–07–1922

மறைவு: 01–02–1996

## 1ஆம் மாதம்



அமரர் சின்னராசா குமரதாஸ்

B. Sc. (Hons) (Cey')

தோற்றம்: 01–05–1967

மறைவு: 05–11–1996

நிலையில்லா வாழ்வினிலே நீங்கா நினைவுகளைத்தந்து விட்டு – நிலையான வாழ்வு - தேடி நீங்கிச் சென்றீர்களோ - எங்கள் குடும்பத்தின் முதல்வரும் - இளையவருமாக!

பிரிவால் துயருறும்:

குடும்பத்தினர்.

ராஜா கிறீம் ஹவுஸ்,
36, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(43914)

## A/L 8

(கலை, வர்த்தகம்)

புதிய பிரிவு

ஆரம்பம்: 07-12-96 (8 மணி)

## A/L 96

பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான மீட்டல் வினா-விடை வகுப்புக்கள்.

**DAY CLASS**

ஆரம்பம்: 10-12-96 (9 மணி)

விவரங்களுக்கு:

S. அருள்நங்கை

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்.

(43900)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## வழமையான தந்திரமா?

இந்த நாட்டில் எழுந்துள்ள இனப்பிரச்சினைக்கு போர் ஒன்றினால் மட்டுமே தீர்வு காண்முடியாது.

இந்த அரசு பதவியேற்ற பின்னர் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் அரசு பெருவெற்றி கண்டுள்ளது. எனினும் அரசியல் தீர்வு ஒன்றினாலேயே இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணமுடியும்.

போரை முடிவுக்குக் கொண்டு வந்து இனப்பிரச்சினையைத் தீர்க்காவிடில், நாட்டின் வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்க்க முடியாமல் போய்விடும்.

இவ்வாறு தெரிவித்திருப்பவர் அரசமைப்பு விவகார அமைச்சரும், பிரதி நிதி அமைச்சருமான பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் ஆவார்.

இனப் பிரச்சினைத் தீர்வுக்கென்று அரசு முன்வைத்துள்ள அதிகாரப் பரவல் திட்டத்தை முன்னெடுத்து அதனை நிறைவேற்றும் பொறுப்பில் பெரும் பங்கு பேராசிரியர் பீரிஸிடமே உள்ளது. அதேவேளை, நாட்டின் நிதி நிலைமைகளை எல்லோரையும் விட அதிகமாக, உள்ளும் புறமும் தெரிந்தவரும் அவரே.

ஆகையால் அவர் கூறுவது, ஏனைய அரசியல்வாதிகள் கூறுவதை விடப் பெறுமதியானது; கருத்தில் எடுக்கப்பட்ட வேண்டியது.

அமைச்சரின் பேச்சு அரசியல் தீர்வை வலியுறுத்திய போதிலும், போரை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்பது தெளிவாகத் தெரிவிக்கப்பட்டிருப்பினும் அரசு நடைமுறையில் அவ்வாறு நடந்து கொள்ளவில்லை என்பது கவலைக்குரியதாகும்.

அமைச்சர் பீரிஸைப் போலவே, ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவரான சரத் அமுனுகமவும் —

இனப் பிரச்சினைக்குத் தீர்வு அரசியல் ரீதியாகவே அன்றி போரின் மூலமாக மேற்கொள்ளப்பட முடியாது — என்று கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் தெரிவித்திருக்கின்றார்.

ஆனால் எல்லோரும் — தெற்கின் எல்லா அரசியல் கட்சிகளையும் சேர்ந்தவர்களும் — பேச்சளவோடு நின்று விடுகிறார்கள்.

அரசியல் தீர்வு ஒன்று எட்டப்பட வேண்டுமானால், அதற்கான அமைதியான சூழ்நிலை ஒன்று உருவாக்கப்பட வேண்டும். போரைத் தொடர்ந்து கொண்டு, அமைதியான சூழ்நிலையைத் தோற்றுவிக்கலாம் என்று எண்ணுவது நடைமுறையில் சாத்தியமாகாது.

அத்தோடு அரசியல் தீர்வு குறித்து விரைவான முடிவும், உகந்த முடிவும் அவசியம். ஆனால் அது விடயத்தில்மந்த கதியும், கருத்து உரசல்களும் தொடரவே செய்கின்றன.

விடுதலைப் புலிகளைப் புறக்கணித்துவிட்டு, அல்லது பலவீனப்படுத்திய பின்னர் அரசியல் தீர்வு காணவே அரசு விரும்புகிறது. அது சாத்தியமோ இல்லையோ என்பது ஒரு புறமிருக்க, அந்த உத்தி நீண்ட காலத்தை விழுங்கிவிடும்.

எனவே அரசியல் தீர்வு‘ சமாதானம் என்று வெறுமனே பேசுவதால் உடனடியாக ஆகப்போவது எதுவும் இல்லை. வழமையான காலம் வாங்கும் தந்திரமே தொடர்வதாக அமையும்.

---

ஜி.சீ.ஈ. சாதாரணதர பரீட்சை

## விழிப்புல வலுவிழந்தோருக்கு விசேட வசதி செய்யப்படுமா?

இம்மாதம் 11 ஆம் திகதி ஆரம்பமாக உள்ள ஜி. சீ. ஈ. சாதாரணதர பரீட்சைக்குத் தோற்றும் விழிப்புல வலுவிழந்த பரீட்சார்த்திகளுக்கு உரிய வசதிகள் செய்யப்படுமா?

அதிகாரிகள் அதற்கேற்ற விதத்தில் முன்கூட்டியே வேண்டிய வசதிகளுக்கு ஏற்பாடு செய்வார்களா?

இவ்வாறு கவலையுடன் கேட்கிறார்கள் கடந்த விசேட ஜி.சீ.ஈ. பரீட்சைக்கு வசதிகள் செய்து கொடுக்கப்படாததால் பாதிக்கப்பட்ட விழிப்புல வலுவிழந்த மாணவர்கள்.

ஜி. சீ. ஈ. 1995 விசேட பரீட்சைக்கு விழிப்புலவலுவிழந்த மாணவர்கள் இருவர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் இருந்து தோற்றியிருந்தனர்.

அவர்களுக்கு பரீட்சை வேளையில் உரிய விசேட எழுது தாள்கள் (பிறயில் பேப்பர்)வழங்கப்படவில்லை. யூனியன் கல்லூரி பரீட்சை மண்டப இரண்டாம் இலக்க பிரதம மேற்பார்வையாளரும் அளவெட்டி அருணாசலம் வித்தியாலய அதிபருமாகிய திரு ச. கைலாசநாதனின் முயற்சியால், சில சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் உதவியுடன் பிறயில் எழுது தாள்களுக்குப் பதிலாக றோணியோ தாள்களில் விடையளிக்க வசதி செய்யப்பட்டது.

கணித பாடத்தில் அவர்களுக்கு விசேட வினாத்தாள்கள் வழங்கப்படுவது வழமை. ஆனால் மேற்படி கணித பாடத்துக்கு சாதாரண பரீட்சார்த்திகளின் வினாத்தாள்களே விநியோகிக்கப்பட்டன. எனினும் அவர்கள் இயன்றளவு விடையளித்தனர்.

இதுசம்பந்தமாக அவர்கள் தங்களது பாதிப்புக்களை கடித மூலம் பரீட்சை ஆணையாளர் அவர்களுக்கு தெரியப்படுத்தியிருந்தனர்.

தற்சமயம் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. இவர்களுக்கு நான்கு பாடங்களுக்கான பெறுபேறுகளே கிடைத்துள்ளன. விடையளித்துள்ள தமிழ்மொழியும் இலக்கியமும், வரலாறும் சமூகக்கல்வியும், சமயம், விருப்புக்குரிய ஆங்கிலம் என்பனவற்றுக்கு தோற்றவில்லை என + என்ற குறியீடு இட்டு பெறுபேறுகள் வந்துள்ளன.

இப்பாடங்களுக்கு இவர்கள் தோற்றியுள்ளதுடன் குறைந்தது திறமைச் சித்தியாவது எதிர்பார்த்திருந்தனர். இதே சமயம் கணித பாடத்தில் இருவரும் சித்தியெய்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேற்படி பாதிப்பை கல்லூரி அதிபர் ஊடாக பரீட்சை ஆணையாளர் அவர்களுக்குத் தெரியப்படுத்தி மீளாய்வு செய்வதற்கான ஒழுங்குகளை மெற்கொண்டுள்ளனர்.

## சிகைஅலங்கரிப்பு நிலையம்

வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள சிகை அலங்கரிப்பு நிலையங்களை புதன் கிழமை தோறும் பூட்டுவதென வடமராட்சி சிகை அலங்கரிப்பாளர் சங்கம் தீர்மானித்துள்ளது. (இ-173)

## ஷிராணியின் நியமனத்துக்கு எதிராக மனு தாக்கல்

கொழும்பு, டிச. 5

இலங்கை உயர் நீதிமன்றத்தின் முதலாவது பெண் நீதியரசராக நியமிக்கப்பட்டுள்ள ஷிராணி பண்டாரநாயக்காவின் நியமனத்தை எதிர்த்து 4 சட்டத்தரணிகள் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுக்களை கடந்த திங்களன்று தாக்கல் செய்தனர்.

சட்டத்தரணிகள் குமார் பொன்னம்பலம், லெடாத் சுவர்ணாதிபதி, பிரான்ஸிஸ் வில்லியம் சில்வா, உதயஸ்ரீ கீர்த்திவர்த்தனா ஆகியோரே இந்த நால்வரும் ஆவர்.

பிரதிவாதிகளாக ஷிராணி பண்டாரநாயக்கா, நீதி அமைச்சர் பேராசிரியர் பீரிஸ், ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்ட பெண்டி, சட்டமா அதிபர் ஆகியோர் மனுவில் குறிக்கப்பட்டுள்ளனர்.

சட்டத்தரணிகளின் சுதந்திரமான செயற்பாட்டைப் பறித்ததாகவும் —

அரசமைப்புக்கு எதிராக நியமனம் செய்ததாகவும் — மனுவில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்த மனுவை விசாரணைக்கு எடுக்குமாறு கோரிய அவர்கள், இந்த மனு மீதான தீர்ப்பு வரும் வரை ஷிராணி பண்டாரநாயக்கா வழக்கு அமர்வுகளில் பங்குபற்றக் கூடாது என்று பணிக்கப்பட வேண்டும் என கோரினர்.

இந்த மனுமக்கள் நேற்று உயர் நீதிமன்றத்தில் ஏழு நீதியரசர்கள் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

நீதியரசர்கள் மார்க் பெர்னாண்டோ, டாக்டர் ஏ.ஆர். பி. அமரசிங்க, வி. இராமநாதன், எஸ். டபிள்யூ. பி. வடுகொடப்பிட்டிய, பி. ஆர். பி. பெரேரா, ஏ.எஸ்.விஜேதுங்கா, ஆனந்த குமாரசுவாமி ஆகியோரை. இந்த மனுக்களை விசாரிப்பதற்கு பிரதம நீதியரசர் ஜி. பி. எஸ். டி. சில்வா நியமித்திருந்தார்.

இந்த மனுக்களை விசாரணைக்கு ஏற்றுக் கொள்வதா என்பதைத் தீர்மானிப்பதற்காக நாளை மீண்டும் நீதிமன்றத்தில் அவற்றை எடுத்துக் கொள்வது என நீதியரசர்கள் முடிவு செய்தனர்.

இதற்கிடையில் திருமதி ஷிராணி பண்டார நாயக்கா கடந்த திங்களன்று தனது கடமைகளை ஆரம்பித்தார்.

உயர் நீதிமன்றில் நீதியரசர்களுக்குரிய ஆசனத்தில் புதிய நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்கா பிரதம நீதியரசர் ஜி. பி. எஸ். டி சில்வா, நீதியரசர் ஏ. எஸ். விஜயதுங்க ஆகியோர் உடன் இருந்தார்.

ஆனால் அவருக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டதை அடுத்து அவர் நேற்று முன் தினம் உயர்நீதிமன்ற விசாரணைகளில் அமரவில்லை. நீதியரசர்கள் மார்க் பெர்னாண்டோ, ஏ. எஸ். விஜேதுங்க ஆகியோருடன் 403 ஆம் இலக்க நீதிமன்றத்தில் கலாநிதி ஷிராணி பண்டார நாயக்கா அமர்வதாக இருந்தது. ஆனால் நீதியரசர் மார்க் பெர்னாண்டோவுக்கு இடது புறம் இருந்த ஆசனம் நேற்று முன்தினம் காலியாக இருந்தது. (இ- உ- 3- 4- 150)

## நாளை

**கார்த்திகை 21**

வெள்ளிக்கிழமை

**திதி:** ஏகாதசி

பின்இரவு 1.27 வரை.

**நட்சத்திரம்:** அத்தம்

காலை 7.13 வரை.

ஏகாதசி விரதம்

**ராகுகாலம்:** 10.47 –12.17

[illegible]

[illegible] பழைய நேரப்படி)

## கல்வயல் சம்பவத்தில் சிப்பாய் விளக்கமறியல்

கொழும்பு, டிச. 5

சாவகச்சேரி கல்வயல் பகுதியில் பெண் ஒருவரைக் கற்பழித்து கொலை செய்ததாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இராணுவச் சிப்பாய் தஸநாயக்க பண்டார கொழும்பு பிரதம நீதிவான் முன்னிலையில் சாவகச்சேரி பொலீஸாரால் ஆஜர் செய்யப்பட்டார்.

இராணுவப் பொலீஸார் கைது செய்த இந்தச் சிப்பாய் மீது வழக்குத் தொடர்வது குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனை பெறவேண்டியுள்ளதால் வழக்கை மறு திகதிக்கு ஒத்திவைக்குமாறு பொலீஸார் கோரினர்.

பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி வரை வழக்கை ஒத்திவைத்த நீதிவான் கைதான சிப்பாயைத் தொடர்ந்து விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (இ-3-150)

## நினைவு தினம்

கூட்டுறவுப் பெரியார் அமரர் வீரசிங்கத்தின் 32 ஆவது நினைவு தின நிகழ்ச்சிகள் இன்று 5 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.30மணிக்கு யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் தா. கந்தசாமி தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெறும்.

இதில் யாழ். பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் க. தேவராசா ‘தலைமைத்துவம்’ என்ற தலைப்பில் நினைவுப் பேருரையாற்றுவார். (அ-4-30)

## சமய சந்நிதிகளில்

தென்மராட்சி, டிச. 5

மிருசுவில் புனித நீக்கிலார் தேவாலய நவநாள் உற்சவம் கடந்த 27 ஆம் திகதி ஆரம்பமாகியது.

இன்று வியாழக்கிழமை மாலை திருநற்கருணை ஆராதனையும் திருப்பலிபூஜையும் இடம்பெற்று நாளைக் காலை திருநாட்பாடற்பலி பூஜையும் திருச்சொரூப பவனியும் இடம்பெறும்.

நவநாள் உற்சவ மறையுரையை பங்குத்தந்தை அருட்திரு .இ. பீற்றர் துரைரத்தினம் அடிகள் நிகழ்த்துவார். (அ-117–173).

★ ★ ★

யாழ் பாணம், டிச. 5

கோப்பாய் தெற்கு அத்தித் தோட்டம் பரமேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த சங்காபிஷேகம் இன்று நடைபெறும்.

சங்காபிஷேகத்தை முன்னிட்டு இடம்பெறும் நிகழ்வுகளில் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் ‘‘அபிராமி கடைக் கண்களே’’ என்னும் பொருள்பற்றி சமயச் சொற்பொழிவு ஆற்றுவார். (அ-15)

## திறப்புவிழா

யாழ்ப்பாணம், டிச. 5

மக்கள் வங்கியின் ஊர்காவற்றுறைக் கிளை திறப்புவிழா இன்று வியாழக்கிழமை காலை 10-30 மணிக்கு நடைபெற உள்ளது.

ஊர்காவற்றுறை பொலீஸ் நிலையத்துக்கு முன்பாக உள்ள கட்டடத்தில் இந்த வங்கிக்கிளை இயங்கும். (அ-4)

## விதை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி )

தடித்து வாங்கிச் சென்றார்கள்.

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் விதை உருளைக்கிழங்கு ‘பக்ரீறியா’ தொற்றுக்கு உட்பட்டு பழுதடையாமல் இருப்பதற்காக இரசாயனக் கலவை விசிறப்பட்டே பொதி செய்யப்பட்டு வருவதுண்டு.

வெள்ளை நிறமாகப் படிந்திருக்கும் இரசாயனப் பொருள்களைக் கழுவிக் காயவிட்டு சந்தையில் விற்பனைக்கு விடுவோரும் உளர். இப்போது உணவுக்குரிய உருளைக் கிழங்குக்கு நிலவும் தட்டுப்பாட்டைச் சாதகமாக்கி விதை கிழங்கு சந்தையில் விற்கப்படுகிறது.

இதேவேளை—

மருதனார்மடம், சுன்னாகம் சந்தைகளில் விதை உருளைக்கிழங்கு விற்பனை செய்வது இன்று வியாழக்கிழமை முதல் தடை செய்யப்பட்டுள்ளது.

வலிகாமம் தெற்கு பிரதேசச் செயலரும் மேலதிக அரசாங்க அதிபருமான ஆ. மகாலிங்கம் இது குறித்து அறிவித்துள்ளார்.

விதை உருளைக்கிழங்கு நடுவதற்கே; அது விற்பதற்கல்ல. எனவே மருதனார்மடம் சந்தையிலோ சுன்னாகம் சந்தையிலோ அல்லது வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட எந்த ஒரு சந்தையிலுமோ விதை உருளைக்கிழங்கு விற்பனைத் தாம் தடைசெய்திருப்பதாக விசேட ஆணையாளர் உதயனுக்குத் தெரிவித்தார். (அ-152)

## இலவச...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சகர் தெரிவித்தார்.

வரவு — செலவுத் திட்ட உரையின்போது இதுதொடர்பான அறிவிப்பு வெளியானது என்றும் —

அது பற்றிய விவரம் அஞ்சல் அதிபர் நாயகத்தினால் சுற்றறிக்கை மூலம் அனைத்துப் பிரதி அஞ்சல் அதிபர் நாயகங்களுக்கும் பிரதேச அஞ்சல் அத்தியட்சகர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் —

அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த அஞ்சல் கட்டணத்தை சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் செலுத்துவதற்கு அஞ்சல் முத்திரை பொறிக்கும் இயந்திரங்கள் கொழும்பில் இருந்து தருவிக்கப்படவுள்ளன என்றும் —

இதன் மூலம் சாதாரண பெறுமதியுடைய அஞ்சல் முத்திரை தொடக்கம் உயர் பெறுமதியான முத்திரை வரையான பெறுமதிக்கு உரிய முத்திரைக் கட்டணங்களைப் பொறிக்க முடியும் என்றும் —

இயந்திர மூலம் அஞ்சல் முத்திரை பொறிக்கப்பட்ட அன்றைய தினமே அக்கடிதம் அஞ்சல் அலுவலகத்தில் சேர்க்கப்பட வேண்டும் என்றும் — அவர் சொன்னார்.

இந்த அஞ்சல் சேவை விநியோகத்தினைப் பெற விரும்புகின்ற திணைக்களங்கள், நிறுவனங்கள் அண்மையிலுள்ள அஞ்சல் அலுவலகத்தில் அல்லது உப அஞ்சல் அலுவலகத்தில் முன்பதிவு செய்ய வேண்டும்.

அஞ்சல் முத்திரை பொறிக்கும் இயந்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பங்களையும் அருகிலுள்ள அஞ்சல் அலுவலகத்தில் அல்லது உப அஞ்சல் அலுவலகத்தில் சமர்ப்பித்து அதன் பிரதி ஒன்றினை அவ்வப்பகுதி பிரதேச அஞ்சல் அத்தியட்சகர்களுக்கு அனுப்பிவைக்கவும் வேண்டும்.

அஞ்சல் கட்டணம் செலுத்தும் இயந்திரம் கிடைக்கின்ற வரை, ஒவ்வொரு திணைக்களத்துக்கும் ஒரு குறித்ததொகை ஒதுக்கப்பட்டு அஞ்சல் சேவை மேற்கொள்ளப்படுமென்றும் —

இதுபற்றிய ஏதேனும் விவரங்கள் தேவைப்படின் அஞ்சல் அத்தியட்சகரிடமோ அல்லது பதில் பிரதி அஞ்சல் நாயகத்திடமோ தொடர்பு கொள்ளலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விடுதலைப் புலிகள் பங்குபற்றாத அதிகாரப் பகிர்வு பயனற்றது!

## ரணில் கூறுகின்றார்

''புலிகளது ஈடுபாடின்றி நடத்தப்படுகின்ற எந்தவொரு அதிகாரப்பரவலாக்கல் யோசனையும் எந்தவிதமான பலனையும் தரப்போவதில்லை''

இவ்வாறு ஐ. தே.க. தலைவரும், எதிர்க்கட்சித்தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஊவா மாகாணத்தில் நடந்த 'மலையக வாழ் தமிழ் மக்களின் அபிவிருத்தியும், அதிகாரப்பரவலாக்கலும்' என்ற தலைப்பிலான கருத்தரங்கில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

சிறுபான்மை மக்களின் நியாயபூர்வமான உரிமைகளை அம்மக்கள் ஏனைய பெரும்பான்மை மக்களைப் போன்று அனுபவிக்க வேண்டும் என்பதே எமது நோக்கமாகும் — என்றும் அவர் கூறினார் (உ- 3)


## சென். ஜோன்ஸ் கல்லூரி
### யாழ்ப்பாணம்
## பழைய மாணவர் சங்கம்

யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர்

**திரு. செ. பத்மநாதன்**

அவர்களைத் தேநீர் விருந்தளித்துக் கௌரவிப்பதற்கு எமது பழைய மாணவர் சங்கத்தினர் தீர்மானித்துள்ளனர். பழைய மாணவர்கள் தமது துணை சகிதம் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

விருந்துபசார காலம்: **07-12-1996** சனிக்கிழமை
நேரம்: பிற்பகல் **3.00** மணி
இடம்: கல்லூரி பீற்றோ மண்டபம்

**A.J.** கதிர்காமர்
கௌரவ செயலாளர்

(43956)



## NEW COURSES புதிய பயிற்சிகள்

வார இறுதி நாள் வகுப்புக்கள்
**ஆரம்பம்: 7 — 12 — 96**

**Computer Classes**
and
**Radio Electronics**

தமிழ், ஆங்கில தட்டச்சு வகுப்புக்களுடன்
மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புகளும்
**ஆரம்பம்: 6 — 12 — 96**

விபரங்களுக்கு:
**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

(43951)



## தற்பொழுது விற்பனையாகின்றன

| | | |
|---|---|---|
| வெள்ளை நாடு | — | கி. ரூ. 17.50 முதல் |
| வெள்ளைப் பச்சை | — | கி. ரூ. 17.00 முதல் |
| வியற்னாம்/ இந்திய வெள்ளைப் பச்சை | — | கி. ரூ. 19.00 முதல் |
| முழு உழுந்து | — | கி. ரூ. 40.00 முதல் |

மற்றும் உணவுப் பொருள்களும்.

**M. L. & Co.**
235, 237, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

[43947]


### வடக்கில் கைதான...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களின் நிலை குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் தூதுக்குழு ஒன்று சட்டமா அதிபர் சில்வாவைச் சந்தித்த போதே இத்தகவல்கள் வெளியிடப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்ட சுமார் நாற்பது பேரையும் அவர்களின் பெற்றோரிடமே அநுராதபுரம் நீதிமன்றத்தில் வைத்து கையளிக்க முடியும்'' — என்றும் சட்டமா அதிபர் தெரிவித்தாராம், (உ-3)

### வடக்குத் தேர்தல் ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களை ஆரம்பிக்குமாறு பல மாதங்களுக்கு முன்னரே நான் தமிழ்க் கட்சிகளிடம் வேண்டுகோள் விடுத்துவிட்டேன்'' — என்று பதிலளித்ததாகத் தெரிகின்றது.

எனினும் தேர்தலை ஒத்திவைக்குமாறு ஜனாதிபதியை தொடர்ந்து வற்புறுத்துவது என தமிழ்க் கட்சிகள் தீர்மானித்திருக்கின்றன.

தற்போது வெளிநாட்டில் சுற்றுப்பயணம் செய்யும் ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகமும் எம். பியுமான டக்ளஸ் தேவானந்தா கொழும்பு திரும்பியதும் இது விடயமாக தமிழ்க் கட்சிகளின் எம். பிக்கள் மீண்டும் ஜனாதிபதியைச் சந்திக்கவுள்ளதாகவும் தெரியவந்தது.

இதற்கிடையில் பொ. ஐ. மு. அரசில் அங்கம் வகிக்கும் கம்யூனிஸ்ட் கட்சியும், வடக்கில் — நீதியான தேர்தலை நடத்துவதற்கு உகந்த சூழ்நிலை இல்லாததால் தேர்தலை ஒத்திவைக்குமாறு அரசைக் கேட்டுள்ளது.

''உள்ளூராட்சித் தேர்தல்களை ஒத்திவைப்பதோ ரத்துச் செய்வதோ ஜனாதிபதியின் அதிகாரத்துக்கு உட்பட்ட விடயம். நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட பின்னரே திடமான முடிவு எடுக்கப்படும்.'' — இவ்வாறு தேர்தல் ஆணையாளர் தயானந்த டி திஸநாயக்க தெரிவித்தார்.


# BITSMANS

**கல்வி நிறுவனம், மானிப்பாய்.**

**97ஆம் கல்வி ஆண்டுக்கான புதிய வகுப்புக்கள்**
ஆண்டு 4 முதல் 11 வரை.

எமது வழமையான **"SUPER GRADE"**
ஆசிரியகுழுவினால் கற்பிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| ★ விஞ்ஞானம் ★<br>இரா. செல்வவடிவேல், தீபன் | ★ கணிதம் ★<br>இரா. அருட்செல்வம், சதீஸ், சிவா |
| ★ தமிழ் ★ ★ சமயம் ★<br>என். பாலா, தர்மா | ★ வரலாறும் சமூகக்கல்வியும் ★<br>★ வர்த்தகம் ★<br>என். ராஜன் |
| ★ ஆங்கிலம் ★<br>★ ஆங்கில இலக்கியம் ★<br>தெய்வதவபாலன், கிருபாகரன் | ஆரம்பம்: சனி மாலை **3-00** மணி<br>**7-12-96** |

விண்ணப்பங்களை முன் கூட்டியே பதிவு செய்யவும். (43915)



உ

## சேவைநலன் பாராட்டு விழா

யா/அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையின்
ஆசிரியராகவும், உப அதிபராகவும் 22 ஆண்டுகள் நற்பணிபுரிந்த



**திரு. கந்தையா சிவராசா அவர்களின்**

சேவைநலன் பாராட்டு விழா இன்று (05-12-96) வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.
யா/ அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை.
1996-12-05

வாழ்த்துவோர்:-
**மேகாஸ் வீடியோ**
அதிநவீன மிக்சர் கமராமூலம் படம் பிடிப்பவர்கள்
மாம்பழம் சந்தி, அரியாலை, யாழ்ப்பாணம்.
(43959)


## 90 ஆவது நாள் நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 21 | 07 |
| 01 | 09 |
| 1958 | 1996 |

### அமரர் சிதம்பரன் கிருபாமூர்த்தி

**திதி:- 05 - 12 - 1996**

எண்பத்தி நான்கில் எம்மருந் தோழன் சூரி எனும் உன் சுகந்த தம்பி நண்பகல் வேளை நம் பணிமனை முன்றலில் ஊரார் பலருடன் சுடுகலன் பொறியால் சுருண்டு மாண்ட பெருந்துயர் தணித்திட உம்முடன் இணைந்தோம். உன்தனையும் தானே கிருபா! உன்தன் கடமையின் பற்றும், பிறர்க்கு உதவிடும் பண்பும் இளமையான் குறும்பும் இரண்டறக் கலந்தே, ஈராறு ஆண்டுகள் ஆற்றினை அரும்பணி. அன்று அயலவர் எம் அன்புடை ஆசிரியை அக்கா அவர்கள் துயரறிந்து உதவிட பசிதனை மறந்து பறந்தனை அவருடன் – நுழைவாயில் பதி அருகிற்கே வருவாய் வந்திடுவாய்; என வாசல் பார்த்திருந்த எமக்கு வந்தது செய்தி, இனி வரவே மாட்டாயென்று. ஐயகோ! இது தகுமோ! தர்மந்தானோ! வருந்துகின்றோம். நாம் வேண்டுகின்றோம் இறையடி உன் ஆத்மா சாந்தி பெறவே.

நண்பன் கிருபா அவர்களது பிரிவில் துயருறும் அவரது குடும்பத்தினருடன் அவருடன் சேர்ந்து அகால மரணத்தைத் தழுவிக்கொண்ட ஆசிரியர் குடும்பத்தாரது துன்பத்திலும் பங்கு கொண்டு பிரார்த்திப்போமாக!

★ ஓம் சாந்தி ! சாந்தி !!. சாந்தி !!! ★

★ நன்றி ★

**தென்மராட்சி மேற்கு**
**பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,**
**ஊழியர் தொழிற் சங்கம்.**

(சி/3670)

மரண அறிவித்தல் 2 ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05 - 12 - 1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org